Regd. No. M. 4593. KUDI ARASU 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

மலர் 18 சனிவாரம், 26-5-1945 வைகாசி-மீ 15உ இதழ் 33

## தொழிலுக்காக குலமா?

### அர்ச்சுனன் சொற்பொழிவு

11-5-45-ந் தேதி கோவையில் நடைபெற்ற கோவை மாவட்ட மருத்துவகுல மாநாட்டிற்குத் தலைமை வகித்த தோழர் என். அர்ச்சுனன் அவர்கள் ஆற்றிய தலைமையுரை:-

தோழர்களே!

இம்மாநாட்டுக்குத் தலைமை வகிக்க என்னைக்கேட்டுக் கொண்டதற்கு இம்மாநாட்டின் வரவேற்புக் கழகத்தாருக்கு என்மீதுள்ள அன்பே காரணம் என்று கருதுகின்றேன். ஆனால் என்னைவிட உங்களில் ஒருவரைத் தலைவராகத் தெரிந்தெடுத்திருப்பீர்களேயானால் அது மிகப் பொருத்தமானதாக இருந்திருக்குமென்றே கருதுகிறேன். என்றாலும், என் கருத்துக்குப்பட்டதை உங்களுக்கு எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன். என் கருத்து இன்னதென்பது உங்களுக்குத் தெரிந்தே என்னைத் தெரிந்தெடுத்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். ஆகவே என் மனதில் பட்டதைச் சொல்லாம் என்று கருதுகிறேன்.

**நம் கடமை என்ன?**

தோழர்களே!

இன்று உலகில் புதுக் கருத்துக்கள், புதுத் திட்டங்கள் ஆயிரக்கணக்கில் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. புது உலகம் சிருஷ்டிப்பது பற்றிப் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன. இந்த வேளையில் நாம் இங்கு கூடியிருக்கிறோம். இதில் வெறும் பழம் பெருமைகளைக் குறித்துப் பேசுவதில் பயனில்லை. உலகம் எந்தப் போக்கில் போய்க்கொண்டிருக்கிறது? நாம் எந்நிலையிலிருக்கிறோம்? நாம் என்னசெய்ய வேண்டும்? நமது கடமை என்ன? என்பதை எண்ணிப் பார்த்து அதற்கான காரியங்களைச் செய்வது தான் புத்திசாலித்தனமான காரியமாகும்.

உலகில் நிலையான சமாதானம் ஏற்படவேண்டுமானால், மக்கள் யாவரும் ஒரு குலம்; யார் யார் எத்தொழிலைச் செய்தாலும் யாவரும் ஒன்றே என்ற நிலைமை ஏற்படவேண்டும். இதற்கு மாறாக என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டாலும், சமாதானம் நிலைக்க முடியாது; யாவரும் சுகமாக வாழ முடியாது.

இந்த நிலையில் நீங்கள் உங்கள் சமுதாயத்திற்கு மருத்துவர்கள் என்று பெயரிடுவதா, அல்லது வேறு பெயரிடுவதா என்ற பிரச்சினையில் இறங்கியிருப்பது உங்கள் சமுதாயத்திற்கோ நாட்டுக்கோ பயனளிக்கக் கூடியதா? என்றுதான் கேட்கிறேன்.

**தொழிலின் காரணமாக பிரிவா?**

தொழிலின் காரணமாக ஒரு சமுதாயத்திற்கே அப்பெயரிடுவது வெறுக்கப்படக்கூடிய காரியமாகும். இந்நாட்டைத் தவிர வேறு எந்நாட்டிலும் இம்முறை இருந்து வருவதாகச் சொல்ல முடியாது. யாரும் எத்தொழிலையும் செய்யலாம். எத்தொழிலை யார் செய்கிறானோ அவனுக்கு அப்பெயரிடலாமே தவிர, ஒரு சமுதாயத்திற்கே அப்பெயரிடுவது பொருத்தமற்றதாகும். இந்திய வரலாற்றைப் பார்த்தால் ஆரியம் இந்நாட்டில் புகுந்த பின் வர்ணாசிரம தர்மமென்றும் அந்தந்த வர்ணத்தார் அவரவர்களுக்குக் குறிக்கப்பட்டுள்ள தொழில்களையே செய்ய வேண்டுமென்றும் விதிகள் ஏற்பட்டு ஆரிய அரசர்களாலும் அவர்களது பழக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டு இன்று தொழிலின் காரணமாக சமுதாயங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய பிரிவை நாங்கள் எதிர்த்து வருகிறோம். தொழிலின் காரணமாக மக்கள் பிரிக்கப்படக்கூடாது, பிறவியின் காரணமாகக் கூடாது என்று கண்டித்து வருகிறோம். எனவே. யாரும் எத்தொழிலையும் செய்யலாம்; இன்னார்தான் இத்தொழிலைச் செய்யவேண்டும் என்ற முறை இருக்கக்கூடாது. இந்தக் கொள்கைப்படி பார்த்தால் மருத்துவம் என்பதும் ஒரு தொழில். இத்தொழிலின் பேரால் ஒரு பிரிவினரைப் பிரித்து வைப்பது எவ்வாறு பொருந்தும்? இன்று க்ஷவரத்தொழிலாளி என்பது இழிவு என்பதாகவோ, நாவிதர்கள் என்பது இழிவு என்று கருதியோ நீங்கள் உங்களுக்கு மருத்துவர்கள் என்று பெயர் வைத்துக்கொண்டீர்களானால் நாளை 'மருத்துவர்' என்ற சொல்லும் இழிவு என்பதாகக் கருதப்படுமானால் இப்பெயரை மாற்றி வேறு பெயர் வைத்துக்கொள்ளப் போகிறீர்களா?

ஆகவே. நான் என்ன சொல்லுகிறேன் என்றால், தொழில்களிலே ஒன்றைவிட ஒன்று உயர்ந்ததாகவோ சிறந்ததாகவோ கருதப்படுதல் கூடாது. எத்தொழிலைச் செய்தாலும் எல்லாம் சமமானதாகவே கருதப்படவேண்டும். மக்கள் சுகமாக வாழ ஒவ்வொரு தொழிலும் இன்றியமையாதது. எந்தத் தொழிலை எவர் இழிவாகக் கருதினாலும் அது மடமையின் பாற்பட்டதேயாகும்.

### நீங்களும் திராவிடர்களே

ஆகவே தோழர்களே, நீங்கள் யாவரும் திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களே என்ற ஒரே எண்ணங்கொண்டு, உங்களை திராவிடர்கள் என்று அழைத்துக்கொள்வதுதான் சிறந்தது என்று கருதுகிறேன். ஆனால், இன்று உங்கள் சமுதாயம் இருந்துவரும் இழிவான நிலைமையைப் போக்க கல்வித் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் பாடுபட நீங்கள் முன்வர வேண்டும். யுத்தத்திற்குப்பின் செய்யவேண்டிய வேலைகளைக் குறித்து சென்னை சர்க்கார் திட்டங்கள் போட்டிருக்கிறார்கள். அத்திட்டங்கள் நிறைவேற்றப்படுமானால் உங்கள் சமுதாயத்தைப் போல் பின்னணியிலுள்ள சமுதாயங்கள் முன்னேறமுடியும் என்று நம்புகின்றேன். படிப்பிலும் தொழிலிலும் முன்னேற்றமடைய வழி இருக்கிறது.

இன்னும் உலகில் உள்ள தொழில்கள் எல்லாம் விஞ்ஞானிகளின் அரும் முயற்சியால் எளிதாக்கப்பட்டு குறைந்தகாலத்தில் அதிக பலனைத் தரத்தக்கதாகச் செய்யப்பட்டு வருகின்றன. உங்கள் தொழிலையும் விஞ்ஞானத்தின் உதவிகொண்டு விருத்திசெய்யலாம். வெகு சீக்கிரத்தில் மின்சாரத்தின் உதவியால் ஒரு ஆள் ஒரு நாளைக்கு 10 பேர்களுக்கு க்ஷவரம் செய்வதை 40, 50 பேர்களுக்குச் செய்யக்கூடிய நிலைமை ஏற்படப்போகிறது. எல்லாத் தொழில்களிலும் பெரும் புரட்சி ஏற்படப்போகிறது. இதற்கு நீங்கள் உங்களைத் தயார் செய்து கொள்ளவேண்டும். நான் முன்னரே சொன்னபடி, நீங்கள் கல்வியறிவு பெற்று யார் யாருக்கு எந்தெந்தத் தொழில்களில் திறமையிருக்கிறதோ அதற்கு ஏற்றவாறு அத்தொழில்களைக் கற்றுத் தேர்ச்சி பெற்று அவைகளைச் செய்ய முன்வரவேண்டும். மூடப் பழக்கங்களையும், குருட்டு நம்பிக்கைகளையும் விட்டு நாகரீகம் பெற்று சிறந்த மக்களாக வாழ ஒவ்வொருவரும் முனைய வேண்டும். வீணில் பழம் பெருமைகளைப் பற்றிப் பேசிக் காலத்தைக் கழிப்பதில் பயனில்லை. அதற்கு இதுவல்ல காலம். ஏதோ என் மனதில் பட்டதை எடுத்துக் கூறினேன். உங்களுடைய அறிவை உபயோகப்படுத்தி சிந்தித்து ஒரு முடிவுக்கு வாருங்கள்.

### எச்சரிக்கை

இந்தச் சமயத்தில் ஒன்று எச்சரிக்கப் பிரியப்படுகிறேன். அதாவது, தொழிலின் காரணமாக உங்கள் சமுதாயம் பிரிக்கப்பட்டு நிலைத்திருப்பதால் சில சமுதாய மக்கள், உடலுழைப்பில்லாமல் சுகவாழ்வு வாழ்ந்து வருகிறார்கள். நீங்கள் திராவிட சமுதாயமாக மாறிவிட்டால், யாரும் எத்தொழிலையும் செய்யலாம் என்று ஏற்பட்டுவிட்டால் அவர்களுடைய சுகவாழ்வுக்கு உலைவைக்கப்பட்டுவிடுமே என்று அஞ்சி உங்களை நயவஞ்சகச்சூழ்ச்சிகளால் அடக்கிவைக்கப் பார்ப்பார்கள். இதில் நீங்கள் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

ஏதோ என் மனதில் பட்டதை எடுத்துச்சொன்னேன். இவ்வளவு நேரம் நீங்கள் பொறுமையாயிருந்து கேட்டதற்கு என் நன்றியைச் செலுத்திக்கொண்டு இனி ஏதாவது பேச இருந்தால் எனது முடிவுரையில் கூறிக்கொள்கிறேன்.

## டாக்டர் அம்பேத்கார் பிறந்தநாள்

லால்குடி தாலுகா பொசம்பியில் 1-5-45ந் தேதி டாக்டர் டி. டி. ராஜன் தலைமையில் ஷை நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அதுசமயம் ஆதிதிராவிட மகாஜன சங்கம் என்றிருந்த பெயரை "தாழ்த்தப்பட்டவகுப்பு ஐக்கிய சங்கம்" என்று திருத்தியமைக்கப்பட்டது. பல தோழர்கள் பல விஷயங்கள் பற்றி சொற்பொழிவாற்றினார்கள்.

* *

பெங்களூர்சிடி வேல்முருகபுர கிராமத்திலுள்ள ஆதனை அபிவிருத்தி சங்கத்தினரால் ஷை நாள் தோழர் எம். எஸ். மாரி தலைமையில் 22-4-45ந் தேதி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தோழர்கள் பூ. பார்த்தசாரதி, கே. விஜயம் ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

## சென்னை மாகாணப் பார்ப்பனரல்லாதார் வக்கீல் சங்கம்

ஷை சங்கத்தின் வருடாந்திரக் கூட்டம் 29-4-45ந் தேதி சர் பி. டி. ராஜன் அவர்கள் தலைமையில் கூடிற்று. அதுசமயம் அடுத்த அட்வகேட் ஜெனரலாக பிராமணரல்லாதாரை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறது என்றும் அவ்வாறு நியமிக்கப்படுகிறவர் வக்கீல்சங்கத்தைச் சேர்ந்தவராயிருக்க வேண்டும் என்றும் எல்லா சர்க்கார் உத்தியோகங்களிலும் அதிலும் குறிப்பாக நீதி இலாகாவில் 97 சதவிகிதம் பிராமணரல்லாதாருக்குக் கிடைக்குமாறு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவப்படி நியமனங்கள் செய்யப்படவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

பின் மேற்படி சங்கத்திற்கு தலைவராக சர் பி. டி. ராஜன் அவர்களும், உபதலைவர்களாகத் தோழர்கள் எம். முத்தைய முதலியார், டபுள்யூ. சக்ரபாணி நாயுடு, எஸ். ஜி. ரங்கராமானுஜம் ஆகியவர்களும், காரியதரிசிகளாக தோழர்கள் கே. சி. சுப்ரமண்ய செட்டியாரும், வி. ஏ. எஸ். சாமியும், பொக்கிஷதாராக ஏ. வி. ஆவுடை நாயகம் அவர்களும் நிர்வாகக் கமிட்டி மெம்பர்களாக 11 பேர்களும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

## பகுத்தறிவு வால்யூம்

### விற்பனைக்குத் தயார்

1937ஆம் வருட பகுத்தறிவு பைண்டு வால்யூம் விற்பனைக்குத் தயார் ஆகிவிட்டது. ('37ஜூன் முதல் '38ஏப்ரல் வரையுள்ள புத்தகங்களில் '37 மே மாதம் புத்தகம் நீங்கி 11-புத்தகங்கள்கொண்ட வால்யூம்) விலை ரூ. 1-12-0. தபால் செலவு வேறு. (புக்போஸ்டில் அனுப்ப 6அணா. ரிஜிஸ்தர் புக்போஸ்டில் அனுப்ப 9-அணா)

'38 மே முதல் '39 ஜனவரி முடிய 9-மாதங்கள் கொண்ட பைண்டு வால்யூமுக்கு விலை ரூ. 1-8-0. தபால் செலவு தனி. (புக்போஸ்டில் அனுப்ப 5-அணா. ரிஜிஸ்தர் புக்போஸ்டில் அனுப்ப 8-அணா)

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

ரோஜா முத்தையா

# திராவிட மாணவர் பிரசாரம்

திருநெல்வேலி: 8-5-45 மாலை 8½ மணிக்கு அத்தர்குடி ஜிம்கானா அருகே மைதானத்தில் தோழர் சீதி மாணிக்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நெல்லைப் புலவர் நா. மு. மாணிக்கம், ஏ. பி. ஜனார்த்தனம் எம். ஏ., அண்ணாமலைநகர் கி. தியாகராசன், சி. ராமசாமி ஆகியோர் பேசினார்கள்.

9-5-45 மாலை 6 மணிக்கு ஞான சம்பந்தர் மடத்தருகில் புலவர் நா. மு. மாணிக்கம் தலைமையில் தோழர்கள் தியாகராசன், இராமசாமி, ஜனார்த்தனம் முதலியோர் சொற்பொழிவாற்றினர்.

ஷை கூட்டங்களில் கட்சிக் கரையான்களைக் கண்டித்தும், நேசநாட்டு வெற்றிக்கு மகிழ்ந்தும், தோழர் கா. சு. பிள்ளையின் மரணத்திற்கு இரங்கியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மதுரை: தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், ஹபிபுல்லா, து. பெரியசாமி, ராமானுஜம் ஆகியோர் 15-5-45 மாலை மேலூரில் தோழர் நல்லமணி பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் சொற்பொழிவாற்றினார்கள்.

16-5-45ல் கத்தத்தில் தோழர் ராமானுஜம் தலைமையில் மாணவத் தோழர்கள் சம்பத், பெரியசாமி, ராமானுஜம், ஹபிபுல்லா முதலியோர் பேசினார்கள்.

18-5-45 மாலை சிறுகுடியில் தோழர் ரங்கன் ராமசாமி தலைமையில் தோழர் ராமநாதன் மாணவத்தோழர்கள் சம்பத், ராமானுஜன், ஹபிபுல்லா, பெரியசாமி ஆகியோர் விரிவுரையாற்றினர்.

19-5-45 தாமரைப்பட்டி தோழர் எஸ். சங்கரலிங்கம் தலைமையில் மாணவத் தோழர்கள் சம்பத், பெரியசாமி, ஹபிபுல்லா தோழர் ஜோசப் என்பவர்கள் சொற்பெருக்காற்றினார்கள்.

20-5-45ந் தேதி மாலை 7 மணிக்கு மதுரை கீழ மார்க்கெட் மைதானத்தில் முனிசிபல் வைஸ்சேர்மன் தோழர் ஆர். சண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற திராவிட மாணவர் பிரசாரக் கூட்டத்தில் தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், கே. தியாகராசன், பட்டுக்கோட்டை கே. வி. அழகர்சாமி, து. பெரியசாமி, ஹபிபுல்லா, கரூர் கே. எஸ். ராசமான் ஆகியவர்கள் விளக்கமாக விரிவுரையாற்றினார்கள்.

ஷை கூட்டங்களில் இம்மாதம் 7, 8 தேதிகளில் சென்னையில் சர் ஆர். கே. சண்முகம் தலைமையில் நடந்த மகாநாடு பிரதிநிதித்துவம் வாய்ந்ததல்லவென்றும், அவர்களின் பேச்சுக்களும் தீர்மானங்களும் 4½ கோடி திராவிட மக்களையும் பாதிக்காதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றி கவர்னர், வைசிராய் ஆகியோருக்கு அனுப்பப்பட்டது.

திருச்சி: (திருச்சி மாவட்ட மாணவர் பிரசாரத்துக்காகக் காரைக்குடி தோழர் ராம. சுப்பையா அவர்களால் ரூ. 10 நன்கொடையாக அளிக்கப்பட்டது.)

9-5-45 மாலை 7 மணிக்கு திருச்சி நாகம்மையார் திராவிடர் கழகச் சார்பில் புலவர் பி. குழந்தையா தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர்கள் சுந்தரமூர்த்தி, சுப்பையா, இதயதுல்லா, இராமையா முதலியோர் பேசினார்கள்.

10-5-45 மாலை 7 மணிக்கு கீழ தேவதானம் திராவிடர் கழக சார்பில் லால்குடி தோழர் எல். என். ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் புலவர் குழந்தையா, சுந்தரமூர்த்தி, சுப்பையா, ராமையா, இதயதுல்லா ஆகிய தோழர்கள் விரிவுரையாற்ற கூட்டம் இரவு 10 மணிக்கு முடிந்தது.

11-5-45-ந் தேதி லால்குடியில் தோழர் சண்முகம் பிள்ளை தலைமையில் தோழர்கள் டி. பி. வேதாசலம், எஸ். தவமணி இராசன், புலவர் குழந்தையா ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

12-5-45-ந் தேதி வரகனேரி பெரியார் இளைஞர் மன்றச் சார்பில் புலவர் குழந்தையா தலைமையில் மாலை 6-30-க்கு கூட்டம் தொடங்கியது. தோழர்கள் எஸ். தவமணி இராசன், சுப்பையா, ராமையா, இதயதுல்லா, சுந்தரமூர்த்தி இவர்கள் பேசிய பின், நன்றி கூறலுடன் 10-30க்கு கூட்டம் முடிந்தது.

13-5-45-ந் தேதி மேலகற்கண்டார் கோட்டை திராவிடர் கழக ஆண்டு விழா நடைபெற்றது. தோழர் பி. ஜனார்த்தனம் எம். ஏ., தலைமையில் தோழர்கள் புலவர் குழந்தையா, சுப்பையா, ஹபிபுல்லா, நெடுஞ்செழியன் பி. ஏ. (ஆனர்ஸ்) சுல்தான்பக்ருதி, தவமணி இராசன், ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

ஷை கூட்டங்களில் தோழர் கா. சு. பிள்ளை மரணத்துக்கு இரங்கியும், நேசநாடுகளின் வெற்றியைப் பாராட்டியும், விவசாய வருமானவரியை ஆதரித்தும், சென்னையில் கூடிய என். ஐ. எல். எப். மகாநாட்டைக் கண்டித்தும், மற்றும் உள்ளூர் சம்பந்தமான சில குறைகளை நீக்கும்படியும் தீர்மானங்கள் நிறைவேறின.

14-5-45ல் ஒட்டக்குடி திராவிடர் கழகச்சார்பில் புலவர் குழந்தையா தலைமையில் தோழர்கள் சுப்பையா, ராமையா, இதயதுல்லா ஆகியோர் பேசினார்கள்.

15ல் உறையூர், 16ல் மணப்பாறை 17ல் பிச்சாண்டார்கோயில், 18ல் திருவளர்சோலை என்ற முறையில் பிரசாரம் நடைபெற்றது.

சேலம்: 8-5-45 மாலை 7-30க்கு பொத்தனூர் ஒலிபெருக்கி மன்றத்தில் தோழர் இரா. நாவலடி தலைமையில் கூடிய கூட்டத்தில் புலவர் நன்னன், இரா. வில்லாளன், என். ஜி. ராசன் ஆகியோர் பேசினர்.

9-5-45 மாலை 7½ மணிக்கு நன்செய் இடையாறு மாரியம்மன் கோவில் முன்னிலையில் தோழர் நாவலடி தலைமையில் இபுராகிம், நன்னன், வில்லாளன், இராசன் ஆகிய தோழர்கள் விரிவுரையாற்றினார்கள். தோழர் க. நாகராசன் நன்றி கூறினார். இவ்வூர் தோழர் கா. சென்னிமலை ஆதரவில் நடைபெற்ற இக்கூட்டமே இவ்வூரில் நமது இயக்கத்தின் முதல் கூட்டமாகும்.

10-5-45 முதல் தட்டுப்பாளையம், செம்படாம்பாளையம், வேலூர் முதலிய ஊர்களிலும், 15-5-45 முதல் நாமக்கல் தாலுகாவிலும் பிரசாரம் நடைபெற்றது.

கோவை:

16-5-45 பவானியில் தோழர் ஜி. என். ராஜூ தலைமையில் தோழர்கள் அப்துல் வகாபு, புலவர் வீரவசு, எஸ். தவமணி இராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தஞ்சை: (நாகை, நன்னிலம், திருத்துறைப்பூண்டி பகுதி)

10-5-45 மாலை 7 மணிக்கு புலிவலத்தைச் சேர்ந்த வேலங்குடியில் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தின் ஆதரவில் சேலம் புலவர் இராமச்சந்திரன் தலைமையில் தோழர்கள் சிவராமசாமி (நாகை) புலவர் சு. மணியம், துரைசாமி, எஸ். தவமணி இராசன், திருஞான சம்பந்தம், அரங்கண்ணல், மனோகரன் ஆகியோர் பேசினர், தாழ்த்தப்பட்ட தோழர்களால் அன்று உணவளிக்கப்பட்டது.

11-5-45-ல் ஆலத்தம்பாடியில் அண்ணாமலை நகர் மாணவத் தோழர் கா. சு. கணபதி தலைமையில் தோழர்கள் திருஞானசம்பந்தம், அரங்கண்ணல் புலவர் மணியம், க. அன்பழகன் பி. ஏ. (ஆனர்ஸ்) ஆகியோரின் நீண்ட சொற்பொழிவுக்குப் பின் தோழர் சண்முகம் நன்றி கூறினார். தோழர் சண்முகம் அவர்களின் அண்ணன் சுப்ரமணியன் அவர்கள் மகன் பன்னீர் செல்வத்தால் "குடி அரசு" வளர்ச்சிக்காகத் திருவாரூர் தோழர் வி. எஸ். யாகூப் வசம் 101 காலணாக்கள் அளிக்கப்பட்டன.

12-5-45-ஆந் தேதி கீவளூர் தோழர் வேதக்கண்ணு தலைமையில் திருஞான சம்பந்தம், அரங்கண்ணல், புலவர் கா. சு. மணியம், க. அன்பழகன் பி. ஏ., (ஆனர்ஸ்) ஆகியோர் விரிவுரையாற்றினர்.

திராவிடன் பதிப்பகம்,
லாங்குபசார் வேலூர் N. A.
எங்களிடம் திராவிடத்தலைவர் படமும், தளபதி படமும்,
மற்ற இளைஞர்கள் படமும் கிடைக்கும்.
தேவைக்கு எழுதுக!

13-5-45 தேவூர் தோழர் சாமிநாதன் தலைமையில் தோழர்கள் அரங்கண்ணல், திருஞானசம்பந்தம், வெற்பரசன், சுந்தரமூர்த்தி, அன்பழகன் ஆகியவர்கள் பேசினார்கள்.

12, 13, 14 ஆகிய மூன்று நாட்களிலும் வேலூர் ரிடையர்டு போலீஸ் இன்ஸ்பெக்டர் தோழர் ஆர். வி. ராஜன் ஆதரவளித்தனர்.

15-5-45 சிக்கலில் தோழர் சிவசிதம்பரம் தலைமையில் திருஞானசம்பந்தம், அரங்கண்ணல், சுந்தரமூர்த்தி, வெற்பரசன், புலவர் க. சு. மணியம் முதலியோர் பேசினர்.

ஷை கூட்டங்களில், பட்டதாரிகளால் சென்னையில் கூட்டப்பட்ட மாநாட்டைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றி அதைக் கவர்னர், வைசிராய், இந்தியா மந்திரி ஆகியோருக்கு அனுப்பினர்.

தென்னாற்காடு: (கடலூர், விழுப்புரம், திண்டிவனம் பகுதி)

9-5-45 மாலை 4மணிக்கு திருப்பாதிரிப்புலியூர் திராவிட இளைஞர் கழகக் கூட்டத்தில் தோழர்கள் சி. இளவழகன், எஸ். எம். தண்டபாணி, திருவாரூர் செங்குட்டுவன் ஆகியோர் பேசினர்.

11-5-45 இரவு 8மணிக்கு நத்தவெளி கிராமத்தில் தோழர் மா. பீட்டர் பி. ஏ., தலைமையில் புலவர் விண்ணொந்தாயனார், புலவர் எழில் நிலவன் ஆகியவர் சொற்பொழிவாற்றினர். தோழர் ஆ. திராவிடமணி பி. ஏ. நன்றிகூறினர். தோழர் பா. நடேசகிராமணி தலைவராகவும், தோழர் அ. கிருஷ்ணசாமி செயலாளராகவும் கொண்ட திராவிடர் கழகம் ஒன்று அமைக்கப்பட்டது.

மாலுமியார்பேட்டையில் 12-5-45 மாலை 7 மணிக்கு தோழர் B. பெருமாள் தலைமையில் புலவர்கள் விண்ணொந்தாயனார், எழில்நிலவன், மாணவர்கள், இளவழகன், வீரமணி ஆகியவர் விளக்கமாகப் பேசியபின் தோழர் பெ. தியாகராசன் நன்றி கூறியதோடு, அனைவருக்கும் உணவளித்தார்.

12-5-45 இரவு 10மணிக்கு தோழர் மா. பீட்டர் தலைமையில் நடந்த கூட்டத்தில் விண்ணொந்தாயனார், எழில் நிலவன் ஆகிய புலவர்களும் தோழர் இளவழகனும் பேசியபின் தோழர் திராவிடமணி நன்றி கூறினார்.

13-5-45 காலை 10மணிக்கு திருப்பாப்புலியூர் போடிசெட்டித் தெருவில் புதுவை "தொழிலாளர் மித்திரன்" ஆசிரியர் தோழர் கா. கலியாணசுந்தரம் தலைமையில் புலவர்கள் விண்ணொந்தாயனார், எழில்நிலவன், ஆறுமுகம், மாணவர்கள் இளவழகன், குப்புசாமி ஆகியோர் விரிவுரையாற்றினர். தோழர் திராவிடமணி நன்றி கூறினார். தோழர் இராமையா உணவளித்து உபசரித்தனர்.

அன்று மாலை 7 மணிக்குக் கடலூர் O. T. யில் தோழர் பி. பெருமாள் தலைமையில் புலவர்கள் விண்ணொந்தாயனார், எழில்நிலவன், தோழர் காஞ்சி கலியாணசுந்தரம் ஆகியோர் பேசிய பின் தோழர் திராவிடமணி நன்றி கூறினர்.

14-5-45 மாலை 7 மணிக்குப் புதுப்பேட்டையில் தோழர் சாம்பசிவம் தலைமையில் தோழர் ஆ. திராவிடமணி பி. ஏ., புலவர்கள் விண்ணொந்தாயனார், எழில்நிலவன் ஆகியோர் பேசினர். தோழர் வைத்தியலிங்கம் நன்றி கூற தோழர் வீரபத்திரன் உணவளித்து உபசரித்தார்.

15-5-45 நெல்லிக்குப்பத்தில் ஆசிரியர் தோழர் வடிவேலு தலைமையில் புலவர் விண்ணொந்தாயனார், காஞ்சி கலியாணசுந்தரம், வீரமணி ஆகியோர் சொற்பொழிவு செய்தனர். தோழர் திராவிடமணி நன்றி கூறிய பின், தோழர் ந. ஜனார்த்தனம் உணவளித்தார்.

(விருத்தாசலம், கல்லக்குறிச்சி பகுதி)

18-5-45 தென்செட்டியந்தலில் தோழர் வீரமணி தலைமையில் புலவர் எழில்நிலவன், தோழர் சிவபாக்கியம் அம்மையார், ஆசிரியர் இராமசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

19-5-45 குளத்துமேட்டில் பல மாணவர்களுக்கிடையில் தோழர் முகமதலி தலைமையில் தோழர்கள் புலவர் இரா. எழில்நிலவன்; வீரமணி ஆகியோர் பேசினர்.

20-5-45 இரவு 8 மணிக்கு சன்னாசிநல்லூரில் தோழர் ராமசாமி தலைமையில் தோழர்கள் புலவர் எழில்நிலவன், வீரமணி ஆகியோர் பேசினர்:

21-5-45 மாலை 6 மணிக்கு திட்டக்குடி ரேடியோ மைதானத்தில் தோழர் கலியபெருமாள் இன்னிசைக்குப் பின் தோழர்கள் இராசலிங்கம், அப்துல்கரீம், புலவர் எழில் நிலவன், வீரமணி ஆகியோர் விரிவுரை ஆற்றினர். மக்கள் திரளாகக்கூடியிருந்ததால் மறுநாளும் ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடுசெய்ய நேர்ந்தது.

(இடமின்மையால் மற்ற கூட்டங்களின் நடவடிக்கைகள் அடுத்த இதழில் வரும்)

செயலாளர்,
திராவிட மாணவர் பிரசாரக் கழகம், ஈரோடு.

---

## திராவிட புதுமலர்ச்சி நாடக சபா

திருநெல்வேலி, மே. 5—

ஷை நாடக சபையாரால் மேலப்பாளையம் எட்வர்ட் தியேட்டரில் "விமலா அல்லது விதவையின் கண்ணீர்" என்னும் நாடகம் டாக்டர் ஆர். வி. சொக்கலிங்கம் தலைமையில் வெகுசிறப்பாக நடத்தேறியது.

## திருமணம்

கொழும்பில் நமது பத்திரிகைகளின் ஏஜண்டு தோழர் ஏ. கே. தேவதாசன் அவர்களுக்கும் தேவலட்சுமி அம்மையாருக்கும் 5-7-45-ந் தேதி மணமகளில்லத்தில் நடைபெறவிருக்கும் திருமணத்தை முன்னிட்டு நிச்சயார்த்த விருந்து 6-6-45-ந் தேதி கொழும்பு கருவாக்காடு நகர மண்டபத்தினருகில் அலக்ஸாண்டர் பிளேஸ் 17/2-ம் நெ. இல்லத்தில் நடைபெறும்.

விழுப்புரம் கமலா எலக்டிரிக் தியேட்டரில்
28-5-45ல்
'சண்டமாருதம் அல்லது வீரகேசரி'
என்னும் சமூக சீர்திருத்த நாடகம்
திராவிடத் தளபதி தோழர்,
C. N. அண்ணாதுரை M. A. அவர்கள் தலைமையில்
நடைபெறும்.
கதை, வசனம்: R. V. கோபாலன்.

ரோஜா முத்தையா

# மிராண்டா - கஜேந்திரன் வாழ்க்கை ஒப்பந்தம்

திருப்பத்தூர் (N. A.)

25-5-45 நேற்றைய தினம் ஈரோடு தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்கள் திருமகன் தோழர் மிராண்டா பி. ஏ., அவர்களுக்கும், திருப்பத்தூர் வழக்கறிஞர் தோழர் ஜி. சாமி நாயுடு அவர்கள் திருமகன் தோழர் கஜேந்திரன் பி. ஏ., அவர்களுக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் இனிது நிறைவேறியது.

தோழர்கள் சர் ஆர். கே. சண்முகம் செட்டியார், கோ. சி. பெரியசாமிப் புலவர் 'குடி அரசு' அலுவலக ஊழியர்கள், சிவசங்கரன் எம். ஏ., பி. எல்., வேலூர், ராவ்பகதூர் என். ஆர். சாமியப்பா, சர் பி. டி. ராஜன், டபிள்யு. பி. ஏ. சவுந்திரபாண்டியன், பி. ரங்கநாத முதலியார் பள்ளிக் பிராசிகூடர் வேலூர், இராவ்சாகிப் டாக்டர் பி. வி. நாராயணசாமி நாயுடு தலைவர் பச்சையப்பன் கல்லூரி சென்னை, என். ராமநாதன் எம். ஏ., பி. எல், இராவ்பகதூர் டி. எம். சின்னய்யபிள்ளை எம். ஏ., பி. எல்., கி. ஆ. பெ. விசுவநாதன் திருச்சி, டி. எஸ். முத்துக்குமாரசாமி முதலியார் திருவண்ணாமலை, டி. என். நாராயணசாமி வாங்கர் திருவண்ணாமலை, ஜி டி. நாயுடு கோவை, எம். ஆர். சித்தையா சேலம், ஆர். இளம்வழுதி அண்ணாமலை பல்கலைக்கழகம், புரபசர் எம். வரதராஜன் பச்சையப்பன் கல்லூரி, எம். வரதராஜன் எம். ஓ. எல்., ஏ. பெருமாள் உதவிக்காரியதரிசி, வடாற்காடு மாவட்ட திராவிடர் கழகம், ஞா. தேவநேயன் மன்னர் மன்னன், புதுவை, எம். சீராமுலு நாயுடு, நகரசபை உறுப்பினர் வேலூர், இராவ்பகதூர் எஸ். பி. ராஜமாணிக்க பண்டாரம் சேலம், டி. ஆதிநாராயணய்யா சப் ஆர்டினேட் ஜட்ஜ் நெல்லூர், டி. அப்துல்லா சென்னை, எம். பி. வடிவேலு முல்லுகொம்பை, குமாரராஜா சர் முத்தய்ய செட்டியார் எம். எல். ஏ., டாக்டர் அ. சிதம்பரநாத செட்டியார் தம்பதிகள், அண்ணாமலை நகர், டி. எஸ். கலியாணசுந்தரம், வி. பழனிசாமி நாயுடு கோவை, ஈ. எம். அண்ணாமலை அட்வகேட் ஈரோடு, எஸ். ஜி. ரங்கராமானுஜம் பார்-அட்-லா பத்மநாப நாயுடு அட்வகேட் வேலூர், ஏ. நாராயணசாமி, வடஆற்காடு மாவட்ட தேசிய முன்னணி, என். ரத்தினம் வேலூர், பி. சின்னசாமி அய்யர், எஸ். பூவராகன், சப்ரிஜிஸ்திரார் சின்னசேலம், எம். சுவாமிராஜ் பி. ஏ., அ. தைரியம் திருச்சி, எம். சந்திரசேகரன் கூட்டுறவு மத்திய பாங்கு வேலூர், ஞானாம்பாள் தஞ்சாவூர், மிஸ் ஜூலியன் ஆரணி, ஆதிநாராயணன் ராஜபாளையம், வெங்கடாச்சாரி வக்கீல் கிருஷ்ணகிரி, கிருஷ்ணராஜ் சந்திரசேகர் தனபதி காட்பாடி, திராவிடமணி பி. ஏ, கடலூர், ஆறுமுகப் பெருமாள் திராவிடர் கழகம் தூத்துக்குடி, எஸ். முத்தய்ய முதலியார் சென்னை, சண்முகசுந்தரம் அருப்புக்கோட்டை, சி. ரங்கசாமி பவானி, ஏ. சித்தையன், கோவை, சகுந்தலா தஞ்சாவூர், என். ஆர். சுப்பிரமணியம் திருப்பூர், மிஸ் மார்கரட் ஸ்டீபன்ஸ், கான்சாகிப் கே. ஏ. சேக்தாவூத் எம். எல். ஏ., பழயகோட்டை பட்டக்காரர், பி. ஆர். சேதுராமன் அட்வகேட் ஈரோடு, இராவ்சாகிப் எம். பாலசுப்பிரமணியம் சென்னை, க. வைத்தியலிங்கம் பிள்ளை வழக்கறிஞர் ஈரோடு, இராவ்பகதூர் வி. வி. ராமசாமி விருதுநகர், பி. நடராச செட்டி பொள்ளாச்சி, பு. செல்வராக துணை ஆசிரியர் 'விடுதலை' டாக்டர் எஸ். தருமாம்பாள், கே. கோவிந்தசாமி, டி. வி. அங்கண்ண செட்டி, சாமி சண்முகானந்தா சென்னை ஆகியவர்கள் தாங்கள் வரமுடியாமைக்கு வருந்தி, மணமக்களை வாழ்த்திக் கடிதங்களும், தந்திகளும் அனுப்பியிருந்தனர்.

திருமணம், மணப்பந்தலிலே, வடாற்காடு ஜில்லா ரிஜிஸ்டிராரால் பதிவு செய்யப்பட்டது. மணமக்கள் தாங்கள் எந்த மதத்தையும் சேர்ந்தவர்களல்லர் என்று குறிப்பிட்டனர். ரிஜிஸ்டர் பத்திரத்தில் பெரியார் ஈ. வெ. ராமசாமி, சேலம் கல்லூரித் தலைவர் அ. ராமசாமிக் கவுண்டர் எம். ஏ., எல். டி., வடாற்காடு ஜில்லா போர்டு தலைவர் பி. பக்தவச்சலு நாயுடு எம். எல். ஏ., ஆகிய மூன்று தோழர்கள் சாட்சிகளாகக் கையெழுத்திட்டனர்.

மணமகன் தந்தை தோழர் ஜி. சாமிநாயுடு அவர்களால் அளிக்கப்பட்ட மாலைகளை மணமக்கள் மாற்றி அணிந்துகொண்டனர். பல தோழர்கள் மணமக்களுக்கு மாலை சூட்டினார்கள்.

(தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க)

மேற்குப் போர்முனையில் அடைந்த
வெற்றிக்கு நன்றி செலுத்துமுகத்தான்

★

(தருப்புகளின் நலன்களுக்கு என்ற தலைப்பில்)

மே. த. கவர்னர்

யுத்த நிதிக்கு மீண்டும்
பணம் கொடுத்து

★

கிழக்குப் போர்முனையிலும்
விரைவில் வெற்றிகாண உதவுங்கள்.

குடி அரசு

1945-ஆம் மே-ஸ்ரீ 26உ

# வௌவால்கள்

சமயசஞ்சீவிகளும் பொது வாழ்க்கையின் பேரால் பிழைக்கும் சிலரும் சேர்ந்து இதுபோது ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் செய்து வரும் சில தொல்லைகளை சாக்காக வைத்துக்கொண்டு சில வௌவால்களும், யோக்கியமற்றவர்களும் நிலையற்றவர்களும் தங்களைத் தனிப்பட்ட பெரிய மனிதர்களாக மனப்பால் குடித்துக்கொண்டு நம் இயக்கங்களுக்குப் புத்திகள் சொல்லப் புறப்பட்டுவிட்டனர். ஒருவருக்கு (பிறருக்கு) புத்தி சொல்ல யாருக்கு உரிமை உண்டு என்பதைப் பற்றிக் கடுகளவுகூட சிந்திக்காமல் பேசுவதற்கும் எழுதுவதற்கும் சந்து கிடைக்கிறதா என்பதைமாத்திரம் சிந்தித்தே திடீரென்று புத்தி சொல்ல ஆரம்பித்துவிடுகிறார்கள்.

அறிவாளிகள் இப்படிப்பட்டவர்களைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்றுகூட சிந்திப்பதில்லை என்பதோடு தமது புத்தி புகட்டலுக்கு ஏதாவது மரியாதை கிடைக்குமா என்பதைப்பற்றியும் இப்படிப்பட்டவர்கள் கவலைப்படுவதில்லை.

இப்படிப்பட்டவர்களில் பலர் இப்போது ஜஸ்டிஸ் கட்சிக்கும் சுயமரியாதைக் கட்சிக்கும் புத்தி சொல்லுவதிலும் அவைகளை இழித்துக் கூறுவதிலும், எல்லாக் கட்சிக்கும் தாங்கள் நல்ல பிள்ளைகளாக நடந்துகொள்ளுவதிலும் எல்லாக் கட்சியிலும் உள்ள மக்களுக்கும் உழைப்பாளிகளுக்கும் தன்னலத்தை விட்டு கஷ்ட கஷ்டமடைந்து தியாகம் செய்தவர்களுக்கும் தாங்கள் மேம்பட்ட மேதாவி மக்கள் என்று காட்டிக்கொள்ளுவதிலும் முனைந்திருக்கிறார்கள்.

இம்மாதிரி காரியங்களை இனியும் அதிகமாக வளரவிடக்கூடாது என்பதற்கு ஆகவே இதை எழுதுகிறோம். இதற்கு முன் பலதடவை இப்படிப்பட்ட காரியங்கள் நடந்தும் அதைக் கிடக்கட்டும் ஏதோ அற்ப பெருமை பெற்றுப் போகட்டும் என்றே அலட்சியமாய்விட்டுவந்தோம். இப்போது அது சற்று அதிகமாகப்போய் பாமர மக்கள் ஏமாற்றப்படுவதற்கு பயன்படக்கூடியதாய் இருப்பதால் அதைப் பற்றிச் சிறிது விளக்கிக் காட்டிவிடவேண்டியதாக ஆகிவிட்டது.

என்னவெனில், இப்போது ஒரு கூட்டத்தார் தங்களுக்கு சிறிதும் சம்மந்தமில்லாத காரியத்தில் பிரவேசித்து ஜஸ்டிஸ் கட்சியும் சுயமரியாதைக் கட்சியும் வேறு வேறாய் இருக்கவேண்டும் என்றும்,

மற்றொரு கூட்டத்தார் இரண்டும் நாசமாய் போய்விட்டது என்றும்,

மற்றொரு கூட்டத்தார் சரியான தலைவர்கள் இல்லாததால் கெட்டுப் போகின்றன என்றும்,

இரண்டும் தனித்தனியாய் நடக்க விட்டுவிடவேண்டுமென்றும்,

ஒன்றை சர் ஷண்முகம், சர் பி. டி. ராஜன் ஆகியவர்களுக்கு விட்டு அவர்கள் பொது மக்களின் ஓட்டுப்பெற்று அரசியல் காரியத்தைப் பார்க்க செய்ய வேண்டுமென்றும், மற்றொன்றை புரட்சிக்காரர்களிடம்விட்டு புரட்சிகரமான காரியம் செய்யச் செய்ய வேண்டும் என்றும், மற்றொரு கூட்டம் மற்றும் என்னென்னமோ உளறிக்கொட்டிக்கொண்டும், மற்றொருகூட்டம் இங்கும் அங்கும் தலைகாட்டிக்கொண்டும் இப்படியாகப் பல வேஷங்களாக இருந்துகொண்டு புத்தி சொல்லுபவைகளாக இருந்து வருகின்றன. இவர்களில் பெரும்பாலோர் பொது வாழ்வின் பேரைச் சொல்லி ஊரார் உழைப்பில் லாபம் பெற்றவர்களே ஒழிய ஒரு அம்மன்காசு அளவு பாடோ கஷ்ட நஷ்டமோ அடைந்தவர்கள் அரிதரிது என்று தான் சொல்லவேண்டும்.

இது ஆரியத்திற்கு அடிமையாகி தன்மானமிழந்து நீண்ட நாளாக இழி நிலையில் இருந்து வரும் திராவிட மக்களுடைய இயற்கைக் குணமென்றே சொல்லத்தக்கதாக இருந்து வருகிறது என்றாலும், நல்லதொரு விழிப்பும், தெளிவும், மான உணர்ச்சியும் தோன்றுகிற இந்தக் காலத்திலும் இப்படி இருப்பதென்றால் இது வருந்தக்கூடியதேயாகும். இன்று திராவிடரில் பலர் தங்களைத் திராவிடர் என்றுகூட ஒப்புக்கொள்வதில்லை, என்பது பலர் அறிந்த உண்மையாகும். அவ்வளவோடு மாத்திரம் அல்லாமல் இவர்களில் தங்களை ஆரியரென்றுகூட சொல்லிக்கொள்ளும் பலர் இருக்கிறார்கள் என்பதும் அறிந்த விஷயமேயாகும். அதோடு மாத்திரமல்லாமல் வருணாச்சிரமதருமத்தை ஒப்புக்கொண்டு வருணாச்சிரமதர்ம பரிபாலன சபையில் அங்கத்தினராக பிரதான புருஷராக அதுவும் பல சைவரும், வேளாளரும், பல செட்டியார், முதலானவர்களும் இருந்து வருவதும் தெரிந்ததேயாகும்.

இவைகள் தவிர, திராவிடர்களில் அநேகர் தங்களை இழிவுபடுத்தி இழிந்த ஸ்தானத்தில் தங்களை இருத்தி வைத்திருக்கும் இந்துமதம் என்பதையே தங்கள் மதம் எனவும், தங்களால் பாதுகாக்கப்பட வேண்டிய மதம் எனவும் சொல்லிக்கொண்டிருப்பவர்கள் எண்ணற்றவர்கள் என்பதும் எவராலும் ஆட்சேபிக்க முடியாததாகும். போதாக்குறைக்கு இந்த மாதிரி சுயமரியாதை உணர்ச்சி அற்ற கூட்டத்தினர் பலரின் எதிரிக்கு அடிமையாய் இருந்து வெளிப்படையாய் நமக்கு எதிரிகளாய் இருந்து தொல்லை கொடுத்தவர்கள் கொடுப்பவர்கள் தேசபக்தர் என்னும் பேரால் ஏராளமானவர்கள் என்பதும் மறுக்கமுடியாததாகிவிட்டது.

இப்படிப்பட்ட திராவிடமக்களின் இழிவை போக்க, நினைத்து தொண்டாற்ற முற்பட்டு முன்வந்த கட்சிகள் இன்று நம் நாட்டில் இரண்டு. ஒன்று ஜஸ்டிஸ் கட்சி மற்றொன்று சுயமரியாதைக்கட்சி. இவை இந்தக்கால் நூற்றாண்டில் ஏற்பட்டவைகளாகும் என்றாலும் ஒரு புரட்சி உணர்ச்சி காட்டி தலையற்ற முண்டங்களைக்கூட நடமாடச் செய்துவிட்டன.

இதில் ஜஸ்டிஸ் கட்சி என்பது பார்ப்பனர்களிடம் அரசியல் உத்தியோகம் பதவி பிரதிநிதித்துவம்

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

ஆகியவைகளில் தோல்வியுற்று, எப்படியாவது இவைகள் மாத்திரம் பெற்றால் போதும் என்கின்ற கருத்தின் மீது சமுதாயத்தின் வகுப்பின் பேரையும் குறைகளையும் சொல்லிக்கொண்டு தோற்றுவித்து சிலர்பயன்பெற்றுவந்தகட்சி என்று சொல்லப்படுவதாகும்.

சுயமரியாதை இயக்கம் என்பது உத்தியோகம், பதவி, பிரதிநிதித்துவத்தை லட்சியம் செய்யாமல் மக்களிடம் இருக்கும் மானமற்ற தன்மையையும், மடமையையும் நீக்கிவிடுவதன் மூலமே எல்லாக் காரியங்களையும் சாதிக்க முடியும் என்று கருதி துவக்கப்பட்டு தொண்டாற்றிவந்த இயக்கமாகும்.

ஜஸ்டிஸ் கட்சி ஆரம்பத்திலேயே தான் உத்தேசித்த காரியத்தில் வெற்றி பெற வசதி ஏற்பட்டு கவர்னர் பதவி பார்க்கும் நிலை வரை உயர்ந்தும் யாதொரு பலன் தரத்தக்க பயனும் அடையாமல் பாமரமக்கள் வெறுப்பைப் பெற்று சாதாரணப் பதவியில் இருக்கவும் முடியாமல் போகும்படியாக ஆகிவிட்டது. அவ்வளவோடல்லாமல் நிலைகுலைந்து அழிந்தே போகும்படியாகவும் எதிரிகள் செய்யக்கூடிய நிலைக்கும் ஆளாகிவிட்டது. ஆனால் இதே சமயத்தில் சுயமரியாதை இயக்கம் நாளுக்கு நாள் கொள்கையும் திட்டமும் வளர்ந்து மக்கள் உள்ளத்தையும் கவர்ந்து பல திட்டங்கள் காரியத்தில் நடக்கும்படியும் செய்து அடியோடு அழிந்துபோக இருந்த ஜஸ்டிஸ் கட்சியையும் எடுத்துக் கொண்டு அதை நல்ல பயன் தரும் வழியில் இருக்க வகை செய்துகொண்டும் வந்ததாகும். இவ்வளவு மாத்திரமல்லாமல் இந்த இரண்டையும் சேர்த்துப் பேசுகின்ற ஆட்களல்லாமல், இந்த இரண்டு போர்வையைப் போர்த்துக்கொண்டு அவற்றின் நிழல்களில் தலைகாட்டுகிற ஆட்களுக்கல்லாமல் மற்றபடி வேறு ஆட்களுக்கு பேசுவதற்கு மேடையோ கேட்பதற்கு ஆளுகளோ மதிப்பதற்கு பூண்டோ இல்லாமல்செய்து இருக்கும் நிலைமையைப் பெற்றவையுமாகும்.

அவ்வளவு மாத்திரமல்லாமல் அனாமதேயமாய் ஆதரவற்றவர்களாய் அறிமுகமில்லாதவர்களாய் அஞ்ஞாத வாசக்காரர்களாய்த் தீர்த்த யாத்திரை சென்றவர்களாய் அரசியல், சமுதாய இயல், பொருளியல் ஆகியவற்றில் சந்யாசமும் துறவும் பூண்டவர்களாய் இருந்தவர்கள் எல்லாம் இன்று அதாவது ஜஸ்டிஸ் கட்சியும் சுயமரியாதைக் கட்சியும் ஒன்றாய் ஒரு தலைவன் ஒரு கூட்டத் தொண்டர்கள் ஆகியவர்களின் கீழ் ஒரு கொள்கையின் அடிப்படையின் கீழ் ஏழெட்டாண்டு வேலைசெய்து வந்ததின்பின் 'நான் ஜஸ்டிஸ் கட்சிக்காரன்' என்றும் 'நான் சுயமரியாதைக்காரன்' என்றும், 'நான் தலைவன்' என்றும், 'நான் காரியதரிசி' என்றும் சொல்லிப் பெருமையும் உரிமையும் பாராட்டிப் பயன்பெற பல மக்களைத் துடிதுடிக்கச் செய்யும்படியானதாகவும் இருப்பவையாகும்.

இந்த நிலையில் தான், முதலில் கூறியபடி ஜஸ்டிஸ் கட்சிக்கும், சுயமரியாதைக் கட்சிக்கும் புத்தி சொல்ல அதைக் குறைத்துக் கூற மேதாவிகள் புறப்பட்டிருக்கிறார்கள்.

இவர்கள் புத்தி சொல்லவந்த அறியாமையைப் பற்றி நாம் பரிதாபப்பட்டாலும் இப்படிப் பலர் இந்த நிழலில் வந்து ஒதுங்க வேண்டி ஏற்பட்டதைப் பற்றி நாம் மகிழ்ச்சியடைகின்றோம். எத்தனை பேர் வேண்டுமானாலும் வந்தடையட்டும் நமக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் நமக்குப் புத்தி சொல்ல வெளியிருக்கும் எந்த "மேதாவிக்கும்" கடுகளவும் இடம் கொடுக்கமாட்டோம் ஏனெனில் நம் இயக்கத்தில் இவர்களைவிட நமக்கு அநுபவமுண்டு. என்பதோடு அப்படிப்பட்டவர்களுக்குச் சிறிதும் இடம் கொடுக்கக்கூடாது என்று நமது நண்பர்களுக்கும் கூட்டு வேலைக்காரத் தோழர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறோம்.

நம்மில் பலவீனமுள்ளவர்களில் ஒரு சிலர், பெரிதும் சிலவாலிபர்கள் வஞ்சகமாகவோ சூழ்ச்சியாகவோ நம் மக்களை ஏமாற்ற நம்மைப் பற்றி நம் இயக்கத்தைப்பற்றியாராவது புகழ்ந்து பேசிவிட்டால் அடுத்தநாள் அப்படிப்பட்டவர்களைப் புகழ்ந்து தூக்கி வைத்துவிடுகிறார்கள். அவர்களுக்கு இடம்கொடுத்தும் விடுகிறார்கள். மேடைகொடுத்துதாங்களும்கூட்டத்தினராக ஆகிவிடுகிறார்கள். பிறகு அந்த சூழ்ச்சிக்காரர்கள் அந்த செல்வாக்கை நமக்கு விரோதமாக செலுத்தியும் நம் எதிரிகளுக்கும் சமய சஞ்சீவிகளுக்கும் விற்றும் சொந்த நலம் பெற ஆரம்பித்துவிடுகிறார்கள். இதை நாம் பலதடவை காரியத்தில்

# திராவிடர் கழகத்திற்கு

## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)

### 26-5-45ந் தேதி வரை 32527 அங்கத்தினர்கள் ரூ. 3229—0—0 சந்தா

மே மாதம் 19-ந் தேதி வரை திராவிட கழகத்திற்(ஜஸ்டிஸ் கட்சிக்)கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து அங்கத்தினர் சேர்த்து தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர் இரசீதுகளின் எண்ணிக்கையும் அவைகளுக்காக வசூலான சந்தா தொகையும் கீழே குறிப்பிட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. கோவை | 5825 | 9. சென்னை | 1747 |
| 2. தஞ்சை | 5729 | 10. மதுரை | 1456 |
| 3. சேலம் | 4460 | 11. செங்கல்பட்டு | 856 |
| 4. திருச்சி | 3886 | 12. திருவிதாங்கூர், (நாஞ்சில்நாடு) | 192 |
| 5. இராமநாதபுரம் | 2293 | 13 பெங்களூர் | 169 |
| 6. திருநெல்வேலி | 2114 | 14. புதுக்கோட்டை | 95 |
| 7. தென் ஆற்காடு | 1877 | | |
| 8. வட ஆற்காடு | 1823 | | |

ஆகமொத்த அங்கத்தினர்கள் 32527. சந்தா ரூ. 3229-0-0.

கண்டிருந்தும் அடிக்கடி ஏமாந்து போகிறோம் என்றுதான் சொல்ல வேண்டும்.

வரும் காலம் சற்று முக்கியமான காலமானதால் சிறிது ஜாக்கிரதையாக இருக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். ஏனெனில், காடுமேட்டை திருத்தி உழுகிறோம், விதைக்கிறோம், நீர்பாய்ச்சுகிறோம். இப்படி நாம் பாடுபட்டு செய்த வினையின் பயனை நம்மைப்பார்த்து இழித்துக்கூறி பரிகாசம் செய்துகொண்டு திரிந்தவர்கள், ஆபத்தில் விட்டுப்போனவர் பலனறுக்க வருவதென்றால் அதுவும் மற்றெல்லோருக்கும் கெடுதி ஏற்படும் வண்ணம் சுயநலத்துக்கு பயன்படும்படி பலனறுக்கவருவதென்றால் அது நமது ஏமாளித்தனமேயாகும். ஆதலாலேயே நம் மக்களுக்கு இந்த எச்சரிக்கை செய்கிறோம்.

இனி முக்கிய விஷயத்திற்கு வருவோம்.

என்னவெனில், வாசகர்கள் ஒரு விஷயத்தை உணரவேண்டும். அதாவது "அரசியல் வேறு, சமுதாய இயல் வேறு என்று சிலர் கூறுகிறார்கள். இது அரசியல் வாழ்வுக்காரர்கள் தங்கள் சுயநலத்திற்கு கண்டெடுத்த முதல்தரப் பித்தலாட்டமே யாகும்.

காங்கரஸ் அரசியல் வேறு சமுதாய இயல் வேறு என்று கருதவும் இல்லை சொல்லவும் இல்லை. 1930ம் வருஷம்வரை காங்கரஸ்சமுதாயத்திற்கு ஆக தனியாய் நடத்தி வந்த சீர்திருத்த மகாநாட்டையும், பேச்சையும், ஸ்தாபனத்தையும் அழித்துவிட்டது. சமுதாய சீர்திருத்த வேலை காங்கரஸ் நிர்மாணத் திட்டமாக இருந்தது.

மற்றும் மதம் வேறு அரசியல் வேறு என்பதும் ஒரு இழிவான பித்தலாட்டப் பேச்சேயாகும். இந்துமகாசபை, முஸ்லிம் லீக், காந்தியாரின் ராமராஜ்ய சுயராஜ்ஜியம், வருணாச்சிரம சுயராஜ்ஜிய சங்கம் ஆகியவை எதுவும் மதத்தைக் கலக்காமல் மத ஆதிக்கத்தைப் பிரதானமாய்க் கருதாமல் மத உணர்ச்சியைக் கொண்டல்லாமல் அரசியலைப்பற்றிப் பேசுவதில்லை.

நம்நாட்டுப் பொதுவுடமைக்காரர்கள் பெரிதும் பித்தலாட்டக்காரர்கள் ஆனதால் (கண்ணி காணையம் ஆனதால்) அவர்கள் மாத்திரம் மதம், ஜாதி, வகுப்பு சம்மந்தங்களை விட்டுவிட்டுப் பேசுகிறார்கள், அதுவும் சமயம்போல் பேசுகிறார்கள். மதபேதம், சமுதாயபேதம் ஜாதி வகுப்புபேதம் இல்லாத இடத்தில்தான் அரசியலில் மதசமுதாயப்பேச்சு இல்லாமல் இருக்க முடியும்.

ஆகவே மதம் சமுதாயம் ஆகியவை சம்மந்தமில்லாமல் அரசியல் என்பது பணம், பதவி, பட்டம் ஆகியவைகளை, அதுவும் ஒரு சிலர் பெறுதற்கா என்று கேட்கிறோம்.

காங்கரஸ் மந்திரிசபை வந்ததும் பார்ப்பனர்கள் வந்தேமாதரம்பாடினதும், முஸ்லிம்களும் திராவிடர்களும் கூடாது என்றதும், பார்ப்பனர்கள் 'ஆசாரிகள் விஸ்வப்பிராமணர்கள் என்றும் ஆச்சாரிகள் என்றும் போட்டுக்கொள்ளக் கூடாது" என்று சொன்னதும், தீண்டப்படாத மக்களுக்கும் கோவில் திறந்துவிடவேண்டுமென்று சொன்னதும் செய்ததும், பொறுக்காரியங்களில் ஜாதிபேதம் இருக்கக்கூடாது என்று சட்டம் செய்ததும், ஜஸ்டிஸ்கட்சியின் கொள்கைகளில் ஜாதிகளை யெல்லாம் அழித்து ஒரு ஜாதியாகவேண்டும் என்று 1920ம் வருடத்திலேயே ஏற்படுத்திக்கொண்டு இருப்பதும், அரசியலா சமுதாய இயலா என்று கேட்பதோடு அரசியலில் சமுதாயம் சேர்க்கப்படவில்லையா என்று கேட்கின்றோம்.

மற்றும் அரசியல்வேறு சமுதாய இயல்வேறு என்றால் அரசியலைக் கைப்பற்றிய ஜஸ்டிஸ் கட்சி ஆட்சி காலத்தில் செய்யமுடியாத சமுதாய இயல் காரியங்கள் காங்கரஸ் காலத்தில் எப்படிச் செய்ய முடிந்தது என்று கேட்கின்றோம். தோழர்கள் சர் ஷண்முகம் செட்டியாரும் சர் பி. டி. ராஜனும் அரசியலில் மந்திரிகளாகவோ, கவர்னர்களாகவோ இருந்தால், அல்லது அவர்கள் கையில் பதவிகளை சர்வாதிகாரமாய் விட்டு விட்டால் அவர்களால் நாட்டுக்கு மக்களுக்கு வேண்டிய என்ன நன்மை செய்யமுடியும் என்று இந்த மேதாவிகளால் சொல்ல முடியுமா என்று கேட்கிறோம். அன்றியும் இவர்கள் நமக்குச் செய்யவேண்டியது அரசியலில் என்ன இருக்கிறது?

பிறகு மற்றொரு கூட்டத்தார் "அரசியல்காரர்கள் அரசியல் வேலை செய்யட்டும் சமுதாய இயல்காரர்கள் சமுதாய வேலை செய்யட்டும்" என்கிறார்கள். இவர் வடிகட்டின வெளவால்கள் என்று கூறவேண்டியிருக்கிறது.

சென்னையில் சென்ற வருஷம் கம்பர் மகாநாட்டுத் திருவிழா நடந்ததுபோல் சமுதாயக்காரர் இராமயாணம் ஆரியக் கதை என்றும் திராவிடர்களை இழிவு படுத்தும் கதை என்றும், அதை வெறுக்கவேண்டும் என்றும், தோழர்கள் அண்ணாதுரை, ராமசாமி அவர்களது நண்பர்கள் ஆகிய சமுதாய வேலைக்காரர்கள் ஊர் ஊராய்க் கத்தவேண்டியதும் தோழர்கள் சர் பி. டி. ராஜன், திவான் பகதூர் நாராயணசாமி பிள்ளை, மற்றும் சில சர் பகதூர்கள் ஆகியவர்கள் ராமாயணத்தை வெள்ளித் தட்டத்தில் பட்டுத்துணியின் மீது வைத்து யானைமேல் மேளவாத்தியங்களுடன் ஊர்கோலம் பூஜை செய்து வந்து போலீஸ் காவலுடன் மாநாடு நடத்தவேண்டியதும் மாநாட்டில் இருகூட்ட மக்கள் ஒருவரை ஒருவர் உதைத்துக் கொள்ளவேண்டியதும, அடிதடி நடக்கவேண்டியதும் ஆகிய இவை தானே நடக்கும் என்று கேட்கிறோம்.

சமுதாயக்காரர் தமிழ் இசை வேண்டுமெனின் சர் ஷண்முகங்களும், ராஜா சர்களும், நடராஜா பஜனை தான்தமிழ் இசை என்று பார்ப்பனர்களைக் கூட்டி வைத்துக்கொண்டு செய்துகாட்டவேண்டியதும், புராண நாடகங்கள் கூடாது என்று சமுதாயக்காரர்கள் சொன்னால் சர் ஆர். கே. களும், சர் பி. டி. களும், குமாரராஜாக்களும் புராண மாநாடுகளுக்கும், நாடகங்களுக்கும் தலைமை வகித்து புராண நாடகக் காரர்களைப் புகழ்ந்து காப்பாற்றி அவர்களுக்கு பாமரமக்களை பலி ஆக்கவேண்டியது மல்லாமல் வேறு என்ன நடக்கும் என்று கேட்கிறோம். எனவே இப்படிப்பட்ட இவர்களிடம் அரசியலைப் பிரித்துத் தந்துவிட்டால் சமுதாயக்காரர்களிடம் இவர்கள்கல்ல நடவடிக்கைக்கு ஜாமீன் வாங்கமாட்டார்களா? தோழர்கள் என். எஸ். கிருஷ்ணன், பாகவதர் அடைந்த

கதியை அளிக்கமாட்டார்களா என்றுகேட்பதோடு இன்று அவர்களைப் பற்றி எந்த அரசியல் சர்பகதார்களாவது பேசுகிறார்களா என்று கேட்கிறோம்.

சர் ஆர். கே. உலகமறிந்த பெரியவர்தான், அரசியலில் அவரால் இரண்டொரு கூலிப்பத்திரிகைக்கும் காலிகளுக்கும் ஏதோ சிறிது வயிற்றுப்பிழைப்பல்லாமல் இன்று வரை இழிபட்ட அவர்ணமக்களுக்கு அல்லது அவர் வகுப்புக்கு ஆவது வேறு என்ன நடந்தது என்று கேட்கிறோம். அதுபோலவே சர் பி. டி. ராஜன் 6-வருடம் மந்திரிப் பதவி பார்த்தவர்தான் அவரால் சில சுப்பிரமணியன்கோவிலுக்கு வெள்ளி, தங்க வேலுகள் கிடைத்ததல்லாமல் மதுரையில் அவரது சில குறிப்பிட்ட நண்பர்களுக்கு ஏதோ பிரைஸ் அடித்ததல்லாமல் சமுதாயத்தில் யாருக்கு என்ன ஏற்பட்டது? என்று கேட்கிறோம். அன்றியும் இவர்கள் அரசியலில் இருந்தால் சமுதாய இயல் பொது வேலை எவ்வளவு (மற்றவர்கள் செய்ததும்) கெட்டுவிட்டது என்பதும் மக்கள் அறியாததா என்று கேட்கின்றோம். இதை அவர்கள் மீதுகுற்றம் சொல்லுவதற்கு ஆக நாம் சொல்லவில்லை. மற்றெதற்கு ஆகச் சொல்லுகிறோம் என்றால்,

சமுதாயம் வேறு அரசியல் வேறு என்று கருதிக்கொண்டு யார் அரசியலில் பிரவேசித்தாலும் எந்தக் கட்சி வேலை செய்தாலும் சிலருக்குப் பட்டம், பணம் அவர்களது சொந்த உள்துறை நண்பர்களுக்கு வேட்டை என்பதல்லாமல் மற்றபடி சமுதாயக் கோளாறால் சகலத்தையும் இழந்து சீழ்ந்து சின்னப்பட்டிருக்கும் நாட்டுக்கோ சமுதாயத்துக்கோ ஒரு காதொடிந்த ஊசி யளவு நலனும் ஏற்படாது என்பதோடு பல கேடுகளும் ஏற்படும் என்பதற்கு ஆக இதை உதாரணமாகச் சொல்லுகிறோம்.

தவிர சிலர் ஜஸ்டிஸ்கட்சி சுயமரியாதைக்கட்சி இரண்டும் ஒன்று சேர்ந்தால் இரண்டு கட்சியும் நாசமாய் போய்விட்டது என்று நீலி அழுகை அழுகிறார்கள். இவர்களைப்போல் அறியாத மக்களோ அல்லது அறிந்தும் வேண்டுமென்றே துரோக புத்தியோடு திரித்துப் பேசுகிறவர்களோ வேறு யாரும் இருக்கமாட்டார்கள் என்றே சொல்லுவோம்.

ஒரு கட்சி நன்றாய் வாழுகிறது என்று இந்த மேதாவிகளால் தியாக மூர்த்திகளால் சொல்லப்பட வேண்டுமானால் அதற்கு அடையாளம் என்ன வேண்டும் என்று கேட்கிறோம்.

பதவி வேண்டுமா? அப்படியானால் பதவி போய் பதவிக்கு ஆக தொங்கிக்கொண்டு திரிகிற காங்கரஸ் நாசமாய் போய்விட்டது என்பது இம்மேதாவிகளின் கருத்தா?

சர்க்கார் மதிக்கவேண்டுமா? அப்படியானால் தங்களுக்கு எதிராய் அடிப்படையில் தங்களுக்கு ஆபத்தை உண்டாக்குவதாய் காணப்படும் ஸ்தாபனத்தை எந்த சர்க்காராவது தாங்கள் மதிப்பதாய்க் காட்டிக்கொள்ளுமா?

கொள்கைகள் இல்லையா? மாநாடுகள் இல்லையா? கூட்டங்கள் இல்லையா? பிரசாரம் இல்லையா? அங்கத்தினர்கள் இல்லையா? ஸ்தாபனங்கள் இல்லையா? இந்தக் கட்சிக் கூட்டங்களில் பேச கலந்துகொள்ள வெளி மக்கள் ஆசைப்படுவதில்லையா? வெளியில் இருப்பவர்களும் நல்ல சமயத்தில் விட்டு விட்டு ஓடினவர்களும், தாங்களாக ஓடிவந்து கலந்துகொண்டு 'நானும் ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்தவன் தான், நானும் சுயமரியாதைக்கட்சியைச் சேர்ந்தவன் தான்'' என்று சொல்லிக் கொள்ளுவதில்லையா? இக்கட்சிக் கொள்கைகளைப் பற்றி மக்கள் அதிகம் என்றோ அதிதீவிரம் என்றோ யாரும் சொல்லிக் கொள்வதில்லையா? கட்சிக்கொள்கை நாஸ்திகமென்றோ மதத்தைப் புராணத்தை வைகிறார்கள் என்றோ யாரும் சொல்லுவதில்லையா? பட்டம் பதவிகளை விடுவது தப்பு என்று வெளியார் பேசுவதில்லையா? கட்சிக்குப் பிரசாரம் செய்ய சுயநலமற்ற ஆள்கள் இல்லையா? வாலிபர்களின் எழுச்சி உணர்ச்சி இல்லையா? பொதுவுடமைக்காரர்கள் முதல் போலி காங்கரஸ்காரர் வரை யாரும் ஒரு குறையும் சொல்ல முடியாத திட்டமும் அது பற்றிய பிரசார பலனும் இல்லையா?

பணக்காரர்களும், சமயசஞ்சீவிகளும், விளைந்த காட்டுக்குருவிகளும், வயிற்றுப்பிழைப்பு கூலிகளும் தங்களுக்கு கட்சிக்குள் இடமில்லாமல் போய்விட்டது என்று சொல்ல இடமில்லையா? ஏது இல்லை என்று கேட்கிறோம்.

அல்லது இந்த 20 வருஷ காலத்தில் இந்த கட்சிகள் ஏதாவது ஒரு சிறு விஷயத்திலாவது கொள்கையில் திட்டத்தில் பின்னால் போய்விட்டது என்று சொல்ல ஏதாவது இடம் இருக்கிறதா?

மக்களுக்குள் சிறிதாவது மூடநம்பிக்கை ஒழியாமலும், மூடச்சடங்கு ஒழியாமலும் மற்றும் கடவுள், மதம், சாஸ்திரங்கள் என்பவைகளின் பேரால் உள்ள மயக்கங்கள் நாளுக்கு நாள் தெளியாமலும், தெளிந்த மக்கள் அதிகமாகாமலும் இருக்கிறதா?

மற்றும் தமிழில் பண்டிதர்கள் புலவர்கள், ஆங்கிலத்தில் பி. ஏ.க்கள், எம். ஏ.க்கள் நல்ல பேச்சாளிகள், எழுத்தாளிகள் நாளுக்கு நாள் இரு கட்சியிலும் அதிகமாகாமல் இருக்கிறதா? அல்லது இந்த 15 வருடத்துக்குமுன் 16 வருடத்துக்குமுன் இருந்ததைவிட குறைந்திருக்கிறதா?

கூடுமானவரை சுயநலக்காரர்கள் வேஷக்காரர்கள் ஆகியவர்களைக் கண்டுபிடித்து வெளியாக்கப்படாமலாவது இருக்கிறதா?

பத்திரிகைகள் இல்லையா? பத்திரிகைகளுக்குக் கொள்கைகள் இல்லையா? அவைகளுக்கு போதிய அளவு பிரபலமும் விளம்பரமும் இல்லையா? அல்லது வேறு எந்த விதமான நாணயக்குறைவான, பொது மக்கள் நம்பிக்கைக்கு பாத்திரமில்லாத நிலையில் ஏதாவது காரியங்கள் நடக்கின்றனவா? அல்லது இக்கட்சிகளின் பேரால் யாராவது முக்கியஸ்தர்கள் சுயநலம் மேன்மை உயர்ந்த வாழ்வு அடைந்தார்களா? அல்லது கஷ்ட நஷ்டத்திற்கு, சிறை செல்வதற்கு, போலீஸ் சோதனை, ஷேடோ, கண்காணிப்பு ஆகியவைகளுக்கு பயந்து ஓடிவிட்டார்களா? இப்படியாக இன்னும் வேறு எந்த வகையிலாவது கட்சிக் கொள்கை, திட்டம், பொது மக்கள் ஆதரவு, பிரசாரப் பலன், காரிய நடப்பு,

நாணையம், ஓர்மிலை முதலாகிய காரியங்கள் அதில் குறை சொல்ல இடமிருக்கிறது என்று காட்டி அதனால் கட்சி நாசமாகவே போய்விட்டது என்று சொன்னால் யோக்கியமும் நாணைய ஒழுக்கமுமான காரியமாகும். அதைவிட்டுவிட்டு காளான்கள் போல் திடீர்திடீரென்று தோன்றுவதும் தங்கள் தன்மைகளை சிறிதும் சிந்தியாமல் மோசமான குறைகளைச்சொல்லி உண்மையாய் பாடுபடுகிறவர்களை இழித்துகூறி விஷமப்பிரசாரம் செய்வதும் என்றால் அதை எப்படி பொறுக்கவோ வளர இடம் கொடுக்கவோ முடியும் என்று கேட்கிறோம்.

மற்றும் சில பச்சகாளாக்களை, பொடியர்களை, எல்லாம் ஏதோ சற்று கிடந்துபோகட்டும் என்று நாம் கருதினால் அதை நமது பலக்குறைவு பயங்காளித்தனம் என்று கருதிக்கொண்டு வெளவால்கள் போல் இருந்துகொண்டு அதிகப்பிரசங்கித்தனமாக பேசுவதும், எழுதுவதும், நடந்து கொள்ளுவதும் என்றால் அது பரிதபிக்கத்தகுந்த கேவல நிலைக்கு அவர்களை கொண்டுவந்து விட்டுவிடும் என்று எச்சரிக்கை செய்கிறோம்.

கடைசியாகச்சொல்கிறோம் ஜஸ்டிஸ் சுயமரியாதைக் கட்சிகள் யாருடைய தயவையும் எந்த ஒரு தனி சுயநல ஆசையையும் கொண்டு இருக்கவில்லை என்றும், எந்த எதிரிகளையும் அவை லட்சியம் செய்யாது என்றும் ஏதோ சுயநலம், சூழ்ச்சி, பொறாமை காரணமாய் முட்டுகிறவர்கள் அப்படியாவது அதற்குண்டான பலனை அடைந்தே தீருவார்கள் என்றும், வெளவால்களுக்குக்கூட இனி இக்கட்சிகளில் இடம் கொடுக்கவோ கட்சியைப் பற்றிப் பேசுவதற்கு பதிலளிக்காமலிருக்கவோ முடியாது என்றும், பொது மக்கள் பாமர மக்கள் ஆகியவர்கள் மனமாற்றத்திற்கும் அவர்களது அறியாமை நீங்கி சமுதாயத்திற்குப் பாடுபடும் உணர்ச்சி உண்டாக்குவதற்கும் உண்மையான மக்களைச் சேர்த்துக்கொண்டுதொண்டாற்றுவதற்கும் கவலை கொண்டு சட்டத்தும் வைத்துக்கொள்ளும் என்றும் வணக்கமாய்த் தெரிவிக்கிறோம்.

## திருச்செங்கோடு திராவிடர் கழகம்

### முதலாவது ஆண்டுவிழா

ஷை. ஆண்டுவிழா புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்கள் தலைமையில் 3-6-45ந் தேதி கழகக் கட்டிடத்தில் நடைபெறும். திருச்சி வழக்கறிஞர் தோழர் டி. பி. வேதாச்சலம் அவர்கள் கொடியேற்றுவார்.

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் திராவிடநாடு படத்தைத் திறந்துவைப்பார். சர் ஏ. டி. பி. செல்வம் படத்தை தோழர் இரா. நெடுஞ்செழியன் திறந்துவைப்பார்.

தோழர்கள் சி. என். அண்ணாதுரை எம். ஏ., ஈ. வெ. கி. சம்பத், என். ஆர். சுப்ரமணியம், க. அன்பழகன், என். அர்ச்சுனன், எம். ஆர். சித்தையன், எம். செல்லப்பா ஆகியவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

அன்றுமாலை 7-மணிக்கு அவ்வூர் 40கால் மண்டபத்தில் பொதுக் கூட்டம் நடைபெறும். தலைவர்கள் யாவரும் பேசுவார்கள்.

ஆர். கே. ஆறுமுகம், தலைவர்.

## சிதம்பரம் திராவிடர் கழகம்

29-5-45 மாலை 8 மணிக்கு 3. மாரியம்மன் தெரு, கழகத்தில் ஷை கழகசெயற்குழுவினர் கூடி தலைவர் ராஜினாமா பற்றியும் கழக வருங் நிலை பற்றியும் ஆலோசித்து முடிவு செய்வார்கள். இதையே அழைப்பாக அனைவரும் கொண்டுவருவார்களாக.

---

( 5-ம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் சேலம் கல்லூரித் தலைவர் தோழர் அ. ராமசாமிக்கவுண்டர் தலைமையில் பாராட்டுக்கூட்டம் அங்கேயே நடைபெற்றது.

வாழ்க்கை ஒப்பந்தத்தைக்காண மாகாணத்தின் பலவேறு பாகங்களிலிருந்து ஏராளமான தோழர்கள் குழுமியிருந்தனர்.

(மற்ற விபரங்கள் அடுத்தகிழமை.)

---

## பெங்களூரில் பொதுக் கூட்டம்

பெங்களூர் நகர திராவிட கழகத்தின் சார்பில் பெங்களூர்சிட்டி சிக்கலால்பார்க் (முனிசிபல் மைதானத்தில்) 10-6-45-ந் தேதி ஞாயிறு மாலை 6 மணிக்கு ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். அதுசமயம் தோழர்கள் எஸ். இராமநாதன் எம். ஏ., பி. எல், அவர்களும், ஏ. பி. ஜனார்த்தனம் எம். ஏ., அவர்களும், ''திராவிட கழகமும் எதிர்கால சீர்திருத்தமும்'' என்னும் பொருள் பற்றி பேசுவார்கள். நகர பொது மக்கள் அனைவரும் கூட்டத்தில் கலந்துகொள்ள விரும்புகிறோம்.

வெ. நாராயணசாமி,
காரியதரிசி.

## தேவேந்திர வேளாளர் வாலிபர் சங்கம்

5-6-45-ந் தேதி காட்டுப்புத்தூர் தேவேந்திர வேளாளர் வாலிபர் சங்க ஆதரவில் ஷையூரில் ஆலோசனைக் கமிட்டி நடைபெறும். திருச்சி ஜில்லா ஷைகுல வாசிகள் அனைவரும் தவறாமல் விஜயம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## கே. பேட்டை திம்மாச்சிபுரம் திராவிடர் கழகம்

### முதலாவது ஆண்டு விழா

30-5-45 காலை 10-30 மணிக்கு திருச்சி ஜில்லா லேபர் அட்வைசரி கமிட்டி மெம்பர் டாக்டர் D. T. ராஜன் அவர்கள் தலைமையின் கீழ் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் தோழர்கள் திருச்சி வழக்கறிஞர் தி. பொ. வேதாச்சலம், வி. வீராசாமி பி. ஏ., தஞ்சை எஸ். மணி, வி. எம். பழனிவேல், தனபாக்கியம் ஆகிய மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவார்கள். அதுசமயம் அனைவர்களையும் வரும்படி அழைக்கப்படுகிறது.

## கூலி குறைப்பு

சங்கரன்கோவில் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு 14 சேலை கொண்ட பாவு ஒன்றுக்கு ரூ. 37 ஆக இருந்துவந்ததை எந்தவித முன்னறிவிப்புமின்றி முதலாளிகள் 15-5-45 முதல் ரூ. 30 ஆக குறைத்திருக்கின்றனர். இது மிகுந்த பரபரப்பையுண்டு பண்ணியிருக்கிறது.

# தமிழாசிரியர்கள்

(புலவர் நா. மு. மாணிக்கம்)

(12-5-45-ம் தேதி தொடர்ச்சி)

சில திங்கட்கு முன் சென்னையம்பதியில், சென்னை மாவட்டத் தமிழாசிரியர்கள் மாநாடு, என்ற பெரும் பெயரால், சில தமிழ்ப் புலவர்கள் ஒன்றுகூடி ஒரு கூட்டம் நடத்தினார்கள். சிறப்பாக சென்னையிலேயுள்ள, சிறிது செல்வாக்குப்படைத்த சில புலவர்கள் மேலும் தங்கள் தன்னலவாழ்வில் எவ்வாறு உயரலாம் என்பதற்கு வழி வகுப்பதே இதன் நோக்கம் என்பதைப் பின்னர் செய்தித்தாள்கள் வாயிலாக அறிந்தேன். ஆனால் இது ஒரு மகிழ்ச்சிக்குரிய செய்தியே, ஒரு சிலராவது மனம் ஒன்றி ஒரு கூட்டத்தையாவது தமிழாசிரியர்கள் மாநாடு என்ற பெயரால் கூட்ட வந்தது (தமிழ்) உலகமே வியக்கத்தகுந்ததென்றுதான் கூறுவேன். அரசியல் உலகிலே திராவிடப் பெரியார் அவர்களும், பாகிஸ்தான் வகுத்த ஜனாப் ஜின்னா அவர்களும், இராமஇராஜ்ஜியமாம் இந்து இராஜ்ஜியம் வேண்டும், தோழர் காந்தியவர்களும் மனம் ஒன்றுபட்டு தத்தம் முன்னேற்றத்திற்குப் பாடுபடுகின்றார்கள் என்ற செய்தியை இந்நாட்டு மக்கள் ஒரு வேளை கேள்வியுறினும் உறலாம்; இத்தமிழ்நாட்டுப் புலவர்கள் என்பார் மனம் ஒன்றுபடுவது குதிரைக் கொம்புதான் என்ற நிலை இருந்து வந்துகொண்டிருக்கின்றது என்பதனைத் திராவிடநாடு நன்கறியும். பல ஆண்டுகட்கு முன்பு சமரச ஞானியாம் சாத்வீகப் பெருவுடையாளர் அன்புத் திரு. வி. க. பண்டிதர்களின் நிலையைச் சித்தரித்தது பண்டுமட்டுமல்ல இன்னும் அந்நிலைதான் என்பதை அறிவுடையோர் அனைவரும் கண்கூடாகக் கண்டு வருவதொன்று. உண்மையான முறையிலே கழகத்தை ஏற்படுத்தி, உயர்ந்த கொள்கைகளை, நாட்டு முன்னேற்றத்திற்கு நலந்தரும் திட்டங்களை, வகுத்து, ஒப்புக்கொண்ட ஆசிரியர்களை உறுப்பினர்களாகச் சேர்த்து, திறத்துடனும் தீரத்துடனும் போரிட்டு நாட்டு நலத்தை நிலைபெறுத்தும் நல்லெண்ணத்தோடு பாடுபடவேண்டிய தகுந்த காலத்தில் ஏதோ கூடினோம், ஏதோ பேசினோம், வானொலி நிலையத்திலும், பாடதிட்ட அமைப்பிலும் சென்னையிலுள்ள ஒவ்வொருவர் மட்டும் வீற்றிருக்கும் முறையிலே, வீர தீரமானவகையிலே, காரசாரமான தீர்மானங்களைப் போட்டோம் என்று பேசிக் கொள்ளும் பெருமை, பகுத்தறிவுப் பாதையிலே சென்று, சற்று கால வேறுபாட்டால் மறந்துள்ள திராவிட நாட்டிற்குப் பாடுபட்டு இன எழுச்சியை இன்றியமையாததாய்க் கருதவேண்டும் என்ற இனம் புலவர்களால் எண்ணிடலைப் பாடற்குரியதென்றாலும் இந்த ஒற்றுமை இல்லா நிலை மாறி ஒற்றுமை பெறுதற்கு—ஒத்த கற்குறிக்கோளுடைய புலவர்கள் இயைந்து ஒரு கழகம் அமைத்துப் பணியாற்றுதற்கு இது ஒரு அறிகுறி என்ற அளவிலே திராவிட மக்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்று நம்புகின்றேன். இந்த மாநாட்டைக் குறித்துத்தான், தினசரி ஆசிரியர் டி. எஸ். சொக்கலிங்கனார் தீட்டியிருந்தார் தமிழாசிரியர்கள் என்ற தலைப்பில் 30-1-45ல் அதனைத்தான் நான் இங்கு தலைப்பாகக்கொண்டது.

தமிழாசிரியர்கள் வாழ்வில் பிற ஆசிரியர்களுக்கு ஒத்த தகுதியும் (அந்தஸ்தும்) ஒத்த ஊதியமும் பெறவேண்டும் என்று அம்மாநாடு (கூட்டம்) வேண்டிக்கொண்டதை இவர் ஆதரிக்கின்றாராம். தங்கள் தகுதி உயரத் தமிழர்களின் ஆதரவு கிடைக்குமென்று நம்பித்தான் மாநாட்டைக் கூட்டியவர்கள் கூட்டியிருக்க வேண்டும், ஆதலால் தமிழ் மக்களின் சார்பாகத் தாம் ஆதரிப்பதாகக் கூறுகின்றார் இவ்வாசிரியர், இந்நிலையில் தமிழ் மக்கள் ஆதரிக்கவேண்டுமானால் தாம் கூறும் சில அறிவுரைகளைத் தமிழாசிரியர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்கின்றார். அவற்றையும் ஆங்காங்கு குறிப்பிடுகின்றார் அவர். (தமிழ்ப் புலவர் முன்னேற்றம் வேறு, தமிழ் மக்கள் முன்னேற்றம் வேறா? என்பதும் தமிழ் மக்களின் சார்பாகப் பேசுவதற்கு இவருக்குற்ற தகுதியாது? என்பதும் தமிழ்ப் புலவர் முன்னேற்றம்வேண்டுமானால் பெற வேண்டியதன்று, முயன்று உரிமையை அடையவேண்டியதொன்று என்பதும் அதற்குத் தமிழ்ப் புலவர்கள் தமிழ் மக்களைப் பகுத்தறிவுப் பாதையில் நடத்திச் செல்லவேண்டுமென்பதும் ஆகியவற்றைக் குறித்து இங்கு விளக்கவேண்டிய அவசியமில்லை என்று கருதுகின்றேன். சந்தர்ப்பம் நேரின் இவற்றைப் பின் விளக்குகின்றேன்) தாய்க்கிழவியின் தளுக்குத்தனத்திற்கேற்பத் தமிழன் என்று பெயர் வைத்துக்கொண்டு தமிழ் மக்களை ஏமாற்றி வாழும் இனத்துரோகியாம், சொக்கலிங்கனார் குறிப்பிடும் நிபந்தனைகளைக் கேளுங்கள்.

"…………அவர்கள் (தமிழாசிரியர்கள்) மாநாடு கூட்ட முன் வந்திருக்கின்றார்கள் (அதனால் தான்) அவர்களுடைய அந்தஸ்தை உயர்த்த வேண்டுமென்பதற்குத் தமிழரின் ஆதரவு கிடைக்குமென்று அவர்கள் நம்புகிறார்கள்……… அந்தஸ்தும் சம்பளமும் ஆங்கில ஆசிரியர்களைப்போன்றிருக்க வேண்டும் என்று தீர்மானம் செய்திருக்கின்றார்கள். அதை முற்றிலும் ஆதரிக்கின்றோம். (4) தமிழ்ப் பண்டிதர்கள் என்றால் பிற்போக்கானவர்கள், சுயராஜ்ஜிய முயற்சிக்கு எதிரானவர்கள் என்ற அபிப்பிராயம் பொதுவாய் நிலவியிருக்கின்றது. அதைப் போக்குவதற்குத் தமிழ் உபாத்தியாயர் சகல முயற்சிகளையும் செய்வார்கள் என்று நம்புகின்றோம். ………(2) தங்களுடைய பிற்போக்கையும் கவனியாமல் காலம் மாறிவிட்டதை அவர்களுணர்ந்து அதற்குக்காரணமான முன்னேற்ற அபிப்பிராயங்களை இனியாவது ஆதரிப்பார்கள் என்று நம்புகின்றோம்………[3] தற்காலத் தமிழ் வளர்ச்சியை அறிந்து மேலும் வளருவதற்கு துணையாக நின்றால்தான் தமிழ் ஆசிரியர்களின் மதிப்பும் உயரும்"

(இவைகள் அத்தலையங்கத்திலிருந்து கருத்தொற்றுமையின் விளக்கத்திற்காக தொடர் தொடராக என்னால் சேர்க்கப்பட்டவையாகும். தொடர்களுள்ளே ஒன்றும் மாற்றப்படவில்லை)

இந்த நாட்டில் சுயராஜ்ஜிய முயற்சிக்கு எதிரி ஜனாப் ஜின்னா ஒருத்தரே ஒருத்தர் என்றும் மூடிவைக்க முடியாமல் திறந்து எழுதவேண்டிய சந்தர்ப்பங்கள் வரும்பொழுது சுயராஜ்ஜியத்திற்கு எதிரி ஈ. வெ. இராமசாமி நாயக்கர் ஒருத்தரே ஒருத்தர் என்றும், தேசியப் போர்வையைப் போர்த்தித் திரியும் ஆரியர்களும் அவருக்குப் பல்லாண்டு பாடிப் பாதம் வருடுவதுதான் பலதப் பிள்ளாமல் வாழுவதற்கு ஏற்ற வழியென்றறிந்த, ஆழ்வார்களின் பரம்பரையைச் சார்ந்த அண்ணாச்சி, சொக்கலிங்கம் போன்றவர்களும் ஒரே முகமாய்க் கூறி வந்திருப்பதை நாம் கேட்டிருக்கின்றோம். அந்தப் பட்டியலிலே தமிழ்ப் புலவர்களும் சேர்த்தெண்ணப்படுவதைக் காண நான் உண்மையிலேயே அகமகிழ்கின்றேன். இதனை விருப்போடு வரவேற்கின்றேன். தமிழ்ப் புலவர்கள் சுயராஜ்ஜியத்திற்கு எதிரிகள் என்று கூறும் தொடர் முழுக்க முழுக்க உண்மையென்று கூறமுடியாதென்றாலும் எதிர்காலத்தில் முழுப்பொருள் தரும் தொடராகக் கல்மேல் எழுத்துப்போல் காட்சி தரவேண்டுமென விரும்புகின்றேன். ஏன்? சுயராஜ்ஜிய எதிரிகள் என்ற சொற்கள் தான் இந்த நாட்களில் உண்மை விடுதலையாளர் என்ற பொருளில் வழங்குகின்றன என்ற காரணத்தால். யாரை சுயராஜ்ஜிய எதிரிகள் என்று பழித்தார்களோ அவரைப் பல படியாகத் தூக்கி வைத்து, அவர் இருப்பிடம் நாடிச் சென்று நாட்கணக்காக, வாரக்கணக்காகக் கலந்து பேசிய காட்சியையும், அவ்வாறு கலந்து பேசவேண்டிய கட்டாயம் ஏன் வந்தது என்பதையும், கட்டாயம் இரும்படியாகச் சுயராஜ்ஜிய எதிரிகளுக்கு அவ்வளவு ஆற்றல் எப்படி வந்தது என்பதையும் உண்மையிலேயே சுயராஜ்ஜிய எதிரியாகவிருந்தால் இவ்வளவு பின்பலம் இருக்குமா? என்பதையும், தங்கள் கையில்தானே தினசரிகள் இருக்கின்றன, தாங்கள் வெளிப்

## வெற்றிக் கொண்டாட்டம் ஊர்வலம்

14-5-45-ந் தேதி இங்கு வெற்றிவிழா ஈரோடு நகர் வர்த்தக சங்கத்தாரால் ஷை கூட்டம் கொண்டாடப் பெற்றது. மேற்படி விழாவில் சித்திக் தொண்டர் படையினரும், பீடி தொழிலாளர்களும் கலந்துகொண்டார்கள். காலை 10 மணிக்கு சித்திக் சவுக்கில் (வழுக்காரத் தெரு) கொடியேற்று விழா தோழர் ந. எம். அண்ணாமலை பிள்ளை பி. ஏ., பி. எல்., அவர்களால் நடத்தப்பட்டது. விழாவுக்குப் பின் மதராஸ் பயர் சர்விஸ் மோட்டார் தொண்டர் படையும், மன்னர் பிரான் படத்தை அலங்கரித்து வைத்து சித்திக் தொண்டர் படையினர் 110 சைக்கில் கொண்ட ஒரு மாபெரும் ஊர்வலம் வெற்றி முழக்கத்துடன் பல தெருக்கள் வழியாகச் சென்று கடைசியாக சித்திக் சவுக்கில் முடிவடைந்தது. கொடியேற்று விழாவின் போது குழந்தைகளுக்குத் தின்பண்டங்கள் வழங்கப்பட்டது.

மாலை 5 மணிக்கு தோழர் எஸ். ஆர். சந்தானம் தலைமையின் கீழ் சித்திக் சவுக்கில் ஒரு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் தோழர்கள் ஏ. மைதீன் பாஷா சாயபு, எம். பி., எஸ். எல். ஆரோக்கியசாமி, ஈ. வி. இக்மயில், ஆ. ஷேக்தாவூத் முதலியோர்கள் பேசிய பின் ஷை கூட்டம் தோழர் எஸ். ஆர். சந்தானம் தலைமையின் கீழ் தொண்டர் படையினர்களால் அணிவகுத்து ஊர்வலமாக அன்று மாலை கடைவீதி பாடசாலையில் நடந்த வெற்றி விழா பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டது. இவ்வூர் தாலுகா யுத்த ஆதரவுக் கமிட்டியின் சித்திக் தொண்டர் படையினருக்கு ஒரு வெள்ளிக் கோப்பை பரிசு கொடுக்கப்பட்டது. அன்னாரின் சேவையைப் பாராட்டிப் பேசப்பட்டது.

---

படித்தினால் தானே தெரியும். இல்லையேல் இத்தமிழ்நாட்டார் எவ்வாறறிவர் என்று ஆணவ நிலை ஒழிந்து தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கும் புத்துணர்வு வேகத்தை அறிந்த நிலை வரும்பொழுது அண்ணாச்சி சொக்கலிங்கமும் அறிந்த ஒன்றுதான் என்பதை யான் கூறித்தான் அறியவேண்டிய நிலையில் இல்லை என்பதையுமறிவேன். (தொடரும்)

## கோவை ஜில்லா முதலாவது மருத்துவர் மாநாடு

ஷை மாநாடு கோவையில் 11-5-45ந் தேதி பழயகோட்டை இளையகுமார பட்டக்காரர் தோழர் ந. அர்ச்சுனன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. சேலம் தோழர் கிருஷ்ணமூர்த்தி கொடியேற்றி வைத்தார். தோழர் இரா. நெடுஞ்செழியன் பி. ஏ., (ஆனர்ஸ்) அவர்கள் உணர்ச்சிமிக்க சொற்பொழிவாற்றியபின் மாநாட்டைத் திறந்து வைத்தார். தோழர் கே. கிருஷ்ணசாமி தமது வரவேற்பு சொற்பொழிவை நிகழ்த்தியபின், தோழர் ந. அர்ச்சுனன் அவர்கள் தமது தலைமை சொற்பொழிவை (அது வேறு பக்கத்தில் வருகிறது) நிகழ்த்தினார். தோழர் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் படத்தை திருச்சி தோழர் டாக்டர் பிச்சைமுத்துவும் டாக்டர் க. பிச்சைமுத்து படத்தை தோழர் டி. ஆர். பழனியப்பனும் திறந்து வைத்த பின்னர் தோழர் எஸ். பார்வதி அம்மையாரின் சொற்பொழிவுடன் காலை நிகழ்ச்சி முடிவுற்றது.

பிற்பகல் மாநாடு மீண்டும் கூடியதும், ஐரோப்பிய யுத்த வெற்றியைக் குறித்து மகிழ்ச்சித் தெரிவித்தும், ஷை குல சிறுவர் சிறுமிகளை சங்கங்கள் படிக்கவைக்க வேண்டுமென்றும், ஷை குல தாய்மார்களுக்கே பிரசவத் தொழிலையளிக்கவேண்டுமென்றும், சங்கங்களை நாடெங்கும் நிறுவவேண்டுமென்றும், விதவா விவாகத் திருமணத்தை ஆதரித்து நடைமுறையில் கொண்டுவர வேண்டுமென்றும், தங்களுடைய தொழில் நிலையங்களுக்கு விதித்திருக்கும் லைசென்சு முறையை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டும் தங்களுடைய குல நடவடிக்கைகளை வெளியிடும் பத்திரிக்கைகளைப் பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இத்தீர்மானங்களை ஆதரித்து தோழர்கள் அ. வி. முத்து, சு. சுந்தரராஜன், பி. முனுசாமி, ஜெ. வெங்கடாசலம், எஸ். சிவலிங்கம், திருமூர்த்தி, ஏ. எஸ். கே. முத்து ஆகியவர்கள் பேசினார்கள். தலைவர் முடிவுரையுடன் மாநாடு இனிது முடிந்தது.

## பேளுக்குறிச்சி விவசாயிகள் சங்கம்

ஷை சங்கப் பொதுக் கூட்டம் பேளுக்குறிச்சியில் 13-4-45-ந் தேதி தோழர் ஜி. பி. சோமசுந்தர கவுண்டர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பல தோழர்கள் பேசிய பிறகு இவ்வூரிலுள்ள போர்டு எலிமெண்டரி பாடசாலையை ஹையர் எலிமெண்டரி பாடசாலையாக்கவேண்டுமென்றும், ஒரு கிராம வைத்தியசாலை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் ஜில்லா போர்டை கேட்டுக்கொள்வதாகவும் கட்டாயக் கல்வித் திட்டத்தை ஏற்படுத்தி ஏழை மாணவர்களுக்கு ஒரு வேளை உணவு அளிக்கவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்வதாகவும், இராசிபுரம் விக்டரி மில்லில் தொழிலாளியை மில் முதலாளிகளும் போலீஸாரும் சேர்ந்து செய்ததாக 16-3-45, 17-3-45-ந் தேதி நடந்த விசாரணைப் பற்றிய விவரம் இதுவரை வெளியிடப்படாததைக் கண்டு வருந்துவதாகவும் மீண்டும் உடனே விசாரணை எடுத்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

---

பொன்மலை பெரியார் தொண்டர் படைக்கு வரக்களித்தபடி இராமனாதபுரம் மாவட்டத் திராவிடர் மாநாட்டினரால் ரூ. 25 நன்கொடையளிக்கப்பட்டது.

---

## தேவை

"குடி அரசு" வாரப் பத்திரிகை விற்பனை செய்ய டிபாசிட்டு கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. மற்ற விபரங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

1. திருப்பூர்
2. உடுமல்பேட்டை
3. விருதுநகர்
4. திருநெல்வேலி
5. கிருஷ்ணகிரி
6. வ. ஆ. வேலூர்

மானேஜர்.

---

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42 Cutchery Street, Erode.